**<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருவொற்றியூர்</u>**

## <u>O.S. No. 57/2010</u>

இந்நீதிமன்றத்து எழுத்தர் திரு.S.சரவணன், உதவியாளர் அவர்களால் சத்திய பிரமானம் செய்விக்கப்பட்டு வாதி / பிரதிவாதி தரப்பு சாட்சி வாக்கு மூலம் 1873 ஆம் ஆண்டு 10-வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2022 ஆண்டு அக்டோபர் மாதம் 20-ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

**தேதி - 20.10.2022**

**பெயர் - ஜெயபால்**

**த/பெ - பொன்னையன் நாடார்**

**சாட்சி - PW1**

**விசாரணை தொடங்கும் நேரம்- 12:14 A.M**

**<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>-**

1. எனக்கு முனிவேல் என்பவரை தெரியுமா என்றால் தெரியும். நானும் அவரும் எந்த வகையில் நன்பர்களாக இருந்தோம் என்றால் அருகாமையில் வசித்ததால் அவரை எனக்கு தெரியும். தாவா சொத்து எனது பூர்விக சொத்து இல்லை என்றால் சரிதான். நான் கிரையத்திற்குதான் நான் வாங்கினேன் என்றால் சரிதான். நான் யார் பெயரில் சொத்தை வாங்கினேன் என்றால் எனது மனைவியில் பெயரில் வாங்கினேன்.

2. 1960லிருந்து தாவா சொத்தில் நான் வசித்து வந்தாதகவும் அதன்பிறகே அந்த சொத்தை விற்பனைக்கு வாங்கியதாகவும் நான் கூறியுள்ள நிலையில் இது குறித்து கிரைய பத்திரத்தில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் 1960 என்பதை குறிப்பிடவில்லை எனினும் அங்கே வாடகைக்கு இருந்ததை குறிப்பிட்டுள்ளேன். அப்பொழுது நான் வாடகை எவ்வளவு கொடுத்தேன் என்றால் சரியாக நினைவில் இல்லை 50 ரூபாய்க்கு வாடகையை ஆரம்பத்தில் கொடுத்து வந்தேன் அதன்பின்னார் உயர்த்தி கொடுத்தேன்.

3. நான் யாரிடம் வாடகையை கொடுத்தேன் என்றால் முதலில் சண்முக கிரமணி என்பவரிடமும் அவரது மகள் துரையம்மாள் என்பவரிடமும் அதன் பின்னர் அவருடைய

பேத்தி அஞ்சுகம் என்பவரிடமும் வாடகையை செலுத்தி வந்தேன். அஞ்சுகம் யாருடைய பேத்தி என்றால் சண்முக கிராமனியின் வாரிசு மேற்படி அஞ்சுகம் நான் பேத்தி என்று கூறுகிறேன். அஞ்சுகம் யாருடைய மகள் என்றால் டி.எஸ்.கோபால் கிரமனியின் மகள் ஆவார் மேற்படி கோபால் கிரமனி சண்முக கிரமனியின் மகன் ஆவார்.

4. நீதிமன்றம் மூலமாக என்ன உத்தரவு பெற்றனர் என்றால் சண்முக கிரமனி இறந்த பிறகு துரையம்மாள் எழுதிய உயிலை மண்புமிகு சென்னை உயர் நீதிமன்றத்தில் Probate உத்தரவு பெற்று அதன்படி அஞ்சுகத்திடம் வாடகையை செலுத்தி வந்தேன். துரையம்மாள் என்பவருக்கு நேரடி வாரிசுகள் யாரும் இல்லை என்றால் சரியல்ல. துரையம்மாளின் நேரடி வாரிசுகள் யார் என்றால் எனக்கு தெரியாது.

5. தற்பொழுது சாட்சி மாற்றி துரையம்மாளுக்கு வாரிசுகள் யாரும் இல்லை என்று தெரிவிக்கிறார் நான் தாவா சொத்தினை 1992ல் கிரையம் பெற்றேன் என்றும் அதன் அசல் ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் செய்துள்ளேன். தற்பொழுது என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ2 ஆவணம்தான் அசல் ஆவணமா என்றால் ஆமாம். நான் கூறுவது தவறு என்றும் இது அசல் ஆவணம் அல்ல சான்றிட்ட ஆவணம் என்றால் சரியல்ல. ஒட்டுமொத்தமாக எவ்வளவு தொகைக்கு சொத்தினை வாங்கினேன் என்றால் எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ2ன் படி சொத்தினை எவ்வளவு தொகைக்கு வாங்கினேன் என்றால் ரூபாய் 70000க்கு வாங்கினேன்.

**(குறுக்கு விசாரணைக்காக வழக்கறிஞர் வேண்டுகோளுக்கு இனங்க ஒத்திவைக்கப்படுகிறது)**

**விசாரணை முடியும் நேரம்- 12:37 P.M**